பர்மா தமிழர்கள் அந்தமான் தீவில் குடியேற்றம்

*184 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் உணவு அமைச்சர் 3-11-1965-ல் கேள்வி எண் 254-க்கு அளித்த பதிலை யொட்டி, தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பர்மா தமிழர்களை அந்தமான் தீவில் குடியேற்றும் திட்டம் தற்போது எந்த நிலையிலுள்ளது ?

THE HON. SRI V. RAMAIAH: The matter is under correspondence with the Government of India.

திரு. கரு. சீமைச்சாமி: முன்பே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது இப்பொழுது பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னால், எவ்வளவு நாள் ஆகும்? பர்மா அகதிகளின் பிரச்னை வெகு முக்கியமான பிரச்னை, ரோடில் பல பேர்கள் உணவு இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதைக் கருதி உடனே இவர்களை குடியேற்றுவதற்கு அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்யும்?

கனம் திரு. வெ. ராமைய்யா: உடனே நடவடிக்கை எடுப்பதில் இந்த அரசாங்கத்திற்கும், மத்திய அரசாங்கத்திற்கும் ஒன்றும் தடை கிடையாது. மத்திய அரசாங்கம் அந்தமான், நிக்கோபார் தீவுகளில் இவர்களைக் குடியேற்றுவதற்கு ஒன்றும் தடை விதிக்கவில்லை. இங்கு வந்திருக்கக்கூடிய பர்மா ரிபாட்ரியேட்களில் எத்தனை பேர்கள் அங்கே போக விரும்புகிறார்கள் என்று ஒவ்வொரு மாவட்ட கலெக்டரையும் கேட்டபொழுது, மார்ச்சு மாதம் வரைக்கும் வந்த விவரப்படி 11 குடும்பங்கள் போகத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் இந்த எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கக்கூடிய காரணத்தினால், மறுபடியும் பத்திரிகை விளம்பரம், மற்ற முறைகளின் மூலம் இப்பொழுது நமக்கு தகவல் வந்திருக்கிறபடி 140 குடும்பங்கள் அங்கே போவதற்கு தயாராக இருக்கிறார்கள். இதற்கு வேண்டிய நடவடிக்கையை மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதில் நான் பார்த்தவரையில் இருக்கக்கூடிய சிக்கல் அங்கே இருக்கக்கூடிய தீவுகளில் குடியேறினால் தங்களுக்கு எவ்வளவு கஷ்டம் இருக்குமோ, இதெல்லாம் புது இடம், மேலும் தங்களுக்கு கஷ்டம் வந்துவிடுமோ என்ற அச்சத்தில் அவர்கள் அங்கே போக தயங்குகிறார்கள். மத்திய அரசாங்கத்தைக் கேட்டு, இந்த ராஜ்யத்தின் விசேஷ அதிகாரிகளோ, மற்றவர்களோ அங்கு போய்ப் பார்த்து, அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படக்கூடிய சூழ்நிலையைப் பார்த்து, மேலும் நடவடிக்கை எடுக்கக்கூடும்.

9.30 a.m. திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு குடும்பங்களை அனுப்ப வாய்ப்பு இருக்கிறது? அங்கே சென்று குடியேறுகிறவர்களுக்கு, இந்திய அரசும், இந்த அரசும் என்னென்ன உதவிகள் செய்யும் என்றும் அறியலாமா?

6th August 1966]

கனம் திரு. வெ. ராமையா : கிட்டத்தட்ட 250 குடும்பங்கள் போக முடியும். இப்பொழுது அவர்கள் போனவுடனே ஒரு தீவில் மராமத்து வேலைகள் நடக்கின்றன, அதிலே எடுத்துக் கொள்ள முடியும். அதன் பிறகு அவர்களுக்கு நிலமும் கொடுக்கிறார்கள். பின்னால் ரப்பர் ப்ளாண்டேஷன் வேலையும் கொடுக்க வாய்ப்பு இருக்கிறது. உடனடியாக ஆறுமாதத்திற்கு அவர்களுக்குத் தேவையான விவசாயப் பொருள்கள் கொடுக்கிறார்கள்.

திரு. ஆர். வி. சுவாமிநாதன் : பர்மா அகதிகளுக்கு ரப்பர் தோட்டங்களில் வேலை செய்துப் பழக்கம் கிடையாது. நெல் விவசாயம் செய்துதான் பழக்கம், பர்மாவிலிருந்து வந்திருக்கும் அகதிகளுக்கு. பர்மா அகதிகள், சிலோனிலிருந்து வருகிறவர்கள் போல அல்ல. ஆகவே, ஒவ்வொருவருக்கும் தகுந்த அளவுக்கு நிலம் ஒதுக்கிக் கொடுத்து விவசாயம் செய்ய ஏற்பாடு இருக்கிறதா மத்திய சர்க்கார் கொள்கையில் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : மத்திய சர்க்கார் விவசாயத்தில் ஈடுபடும் குடும்பங்கள் தேவை என்றுதான் சொல்லுகிறார்கள். ஆனால் சிலர் ரப்பர் தோட்டத்திலும் வேலை செய்யலாம். அப்படிச் செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தம் கிடையாது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், பர்மா தமிழர்கள் போல, இலங்கையிலிருந்து திரும்பும் தமிழர்களுக்கும் இப்படி தீவுகளுக்குச் செல்ல வேண்டும் என்றால் வழிவகை செய்ய அரசாங்கம் யோசிக்குமா ?

கனம் திரு. வெ. ராமையா : அதையும் மத்திய சர்க்கார் பரிசீலனை செய்கிறது.

வாரச் சந்தைகள்

*189 கேள்வி.—திரு. ம. கமலநாதன் : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தனியார் வாரச் சந்தைகளை, பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்று நடத்த வழிவகை செய்ய உத்தேசமுண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அரசினரிடம் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை. எந்த ஊராட்சி ஒன்றியப் மன்றமாவது தனியார் வாரச் சந்தைகளை எடுத்து நடத்த உத்தேசித்துள்ளதா என்ற தகவல் சேகரிக்கப்படுகிறது.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, தற்போது ஜமீன் இனும் ஒழிக்கப்பட்டுவிட்டது. ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. பற்றாக்குறையான வருமானம் உள்ள பஞ்சாயத்துக்களுக்கு அதிக வருமானம் வர வழியாக இருக்கும் என்று இந்த யோசனையைச் சொன்னேன். கனம் அமைச்சர் 'இல்லை' என்று சொல்லுகிறார்கள். இப்பொழுது இருக்கிற நிலைமையில் அவர்களுடைய வருமானத்தில் 15 சத விகிதம் வரியாகச் செலுத்த வேண்டியிருக்கிறது. சரியான கணக்குக் கொடுக்காததால், வரி